M.C.NO.12/2021 Page No.
DATE:16.06.2023.
P.W.1-KOMATHI, W/O.KUMARESAN

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:

கடந்த 26.01.2020 அன்று எதிர்மனுதாரர் என்னை அவர் பணிபுரியும் இடத்திற்கு காட்பாடியிலிருந்து அழைத்து சென்றார் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. 2020 ஆம் ஜனவரி மாதம் இறுதியில் அழைத்து சென்றார் என்றால் சரிதான். காட்பாடியிலிருந்து டெல்லிக்கு ரயிலிலும் டெல்லிருந்து ஜம்முவிற்கு விமானம் மூலமும் சென்றோம் என்றால் சரிதான். பஞ்சாப் விமான நிலையத்தில் எனக்கு எதிர்மனுதாரர் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் வாங்கி கொடுத்த சப்பாத்தி எனக்கு பிடிக்கவில்லை என்றால் அவர் சாப்பாடே வாங்கிக் கொடுக்கவில்லை. அவர் வாங்கிக் கொடுத்த உணவு எனக்கு பிடிக்கவில்லை என்பதால் அவர் மீது காபியை கொட்டினேன் என்றால் சரியல்ல.

சென்டரல் பாங்க் ஆப் இந்தியா, லத்தேரி கிளைக்கு எதிர்மனுதாரர் எத்தனை முறை பணம் அனுப்பினார் என்றால் 4 முறை அனுப்பியுள்ளார். மேற்படி சேமிப்பு வங்கி கணக்கு எண் 3945946418 ஆகும் என்றால் ஞாபகமில்லை. மேற்படி கணக்கிற்கு 5 முறை பணம் அனுப்பியுள்ளார் என்றால் 4 முறை மட்டுமே அனுப்பியுள்ளார். நான் குழந்தை பிரசவத்திற்காக ரூசா மருத்துவமனைக்கு சேர்ந்த விவரத்தை எதிர்மனுதாரரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பிரசவம் முடித்து 06.02.2021 அன்று வீட்டிற்கு வந்தப்பிறகு தான் எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்த விவரம் ரஞ்சித் என்பவர் மூலம் தெரியும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் எதிர்மனுதாரர் மருத்துவ செலவிற்காக என்னிடம் ரூ.15 ஆயிரம் தொகை கொடுத்தார் என்றால் சரியல்ல.

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள என்னுடைய சொத்து விவரம் மற்றும் கடன் விவரம் அடங்கிய பிரமாண வாக்குமூலத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் உள்ள எந்த கேண்டீனில் பணிபுரிந்து வருகிறேன் என்ற விவரத்தை அதில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மாத வருமானமானது எனது வங்கி கணக்கிற்கு நேரடியாக வந்துவிடும் என்றால் சரிதான். எனக்கு வருகின்ற வருமானத்தை மறைக்கும் பொருட்டு மேற்படி வங்கி கணக்கு உட்பட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 7 வருடங்களாக சென்டரல் பாங்க் ஆப் இந்தியா, லத்தேரி கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது. எனது அனைத்து பணப்பரிவர்த்தனைகளும் மேற்படி வங்கி கணக்கில் தான் நடைபெறுகிறது என்றால் சரிதான்.

வரதட்சணை கேட்டு எனது மாமியார் வளர்மதி, அவரின் தம்பி சின்னதம்பி மற்றும் அவரின் மனைவி பவித்ரா ஆகியோர் மீது எந்த காவல் நிலையத்திலும் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவர்கள் மீது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்பதால் தான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 17.05.2019 அன்று லத்தேரி காவல் நிலையத்தில் எனது கணவர் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரின் மீது காவல் நிலையத்தில் நடந்த விசாரணைக்கு எதிர்மனுதார் ஆஜராகவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் காவல் நிலையத்தால் விசாரணை மேற்கொள்ளும்போதெல்லாம் எதிர்மனுதாரர் எந்த பிரச்சனையிலும் ஈடுபடமாட்டேன் என கூறி நான் கொடுத்த புகார் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பார்த்துக்கொண்டார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் ரசீதுகளுக்கான புகாரினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் அதில் உள்ள விவரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுக்கள் அனைத்தும் என்பதால் தான் போலிசார் அதன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மனு அளித்துள்ளேன்.

2020 ஜனவரி இறுதி வாரம் முதல் 2020 ஜுலை முதல் வாரம் வரை எதிர்மனுதாரருடன் அவர் வேலை செய்யும் இடமான ஜம்முவில் குப்புவாரா என்னும் இடத்தில் தங்கியிருந்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.9 அழைப்பாணை சம்பந்தமாக புகார் மனுவை எந்த தேதியில் சமூக நலத்துறையில் வழங்கினேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் காட்பாடியிலிருந்து ஜம்மு செல்லும் வரை விசாரணை ஏதும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. எனது பிரசவத்தின் போது மருத்துவ ஆவணங்களில் எனது அம்மா கையொப்பம் செய்தார். அச்சமயத்தில் மருத்துவர்களிடம் எனது கணவர் வெளியூரில் இருப்பதாக பொய்யான தகவல் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

தற்சமயம் நான் வைத்துள்ள ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரருக்கு திருமணத்தின் போது நாங்கள் கொடுத்த ஸ்பிளன்டர் இரு சக்கர வாகனத்தை மாற்றி அதில் வந்த பணத்தில் ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தை வாங்கினோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மேற்படி ஸ்பிளன்டர் இரு சக்கர வாகனத்தை தனக்கு வேண்டாம் என்று லத்தேரி காவல் நிலையத்தில் விட்டுவிட்டு சென்றுவிட்டார். எதிர்மனுதாரர் 17.05.2019 ஆம் தேதியில் லத்தேரி காவல் நிலையத்தில் மேற்படி வாகனத்தை விட்டுவிட்டு சென்றார் என்றால் தேதி ஞாபகமில்லை. அச்சமயத்தில் எதிர்மனுதாரர் அவருக்கு திருமணத்தின்போது கொடுத்த செயின் மற்றும் கைசெயின் இரண்டையும் வண்டியின் மீது வைத்துவிட்டு சென்றுவிட்டார். 17.05.2019 அன்று எதிர்மனுதாரர் போலிசார் விசாரணைக்கு ஆஜராகி மேற்படி பொருட்களை எங்களிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டார் என்றால் சரியல்ல.

வரதட்சணை கேட்டாலோ அல்லது அது சம்பந்தமான பிரச்சனை இருந்தால் பக்கத்தில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது மகளிர் காவல் நிலையத்திலோ புகார் அளிக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாரர் அவர் பணி செய்யும் இடத்தில் இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவரின் மேல் அதிகாரிகளுக்கு பொய்யான தகவலுடன் ஆவணம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14 ஆவணமானது தவறான சங்கதிகளை கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. மருத்துவ செலவிற்காக இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு ஆயுஸ்மான் அட்டை கொடுக்கப்படும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

எதிர்மனுதாரர் அக்டோபர் 2021ல் ஆயுஸ்மான் மருத்துவ அட்டைக்கு விண்ணப்பிக்க எனது கைப்பேசி எண்ணை கொடுத்திருந்ததால் அந்த எண்ணிற்கு வந்த One Time Password யை அவரிடம் தெரிவிக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH

Digitally signed by J JAYGANESH
Date: 2023.06.16 17:40:58 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.